# நிலாவின் நூலகம் - 2

- ***புதிய அரசியல் அமைப்பின் ஊடாக சிங்கள அரசு செய்ய விரும்புவது என்ன???***

  1) *இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நீக்குதல்*
  2) *விகிதாசார முறைமையை நீக்குதல்*

இலங்கையில் விகிதாசார முறைமையை நீக்குவதன் ஊடாக முஸ்லீம்களின் பிரதிநித்துவம் குறைக்கப்படும் என்பது இந்திய மத்திய அரசிற்கு விருப்பாக இருக்கக்கூடிய வாய்ப்புகள் உள்ளதால் இந்தியாவின் விருப்பை தனது விருப்புடன் ஒன்றாக இணைத்தே சிங்கள இராஜதந்திரம் தொழிற்பட்டு இருக்கும்.எனவே நான் கருதுகின்றேன்.

அதேவேளை மறுமுனையில் இந்தியாவின் பிடியைஇலங்கையில் இருந்து நீங்கப்போகின்றது என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதை இந்தியா அறியாத வண்ணம் இனிப்பாக பேசி பழகி ஏமாற்ற வல்லவர்கள்.ஏனெனில் சிங்களவர்களின் இராஜதந்திரம் என்பது அணைத்துக் கெடுதலே.

இலங்கையில் இருப்பது பொருளாதாரப்பிரச்சனை என்றும் அதனை நீக்குவதற்கு இந்தியா உதவிசெய்யவேண்டும் என்றும் இந்தியாவிற்கு கூறியிருக்கக்கூடிய வாய்ப்புக்களையே கடந்த சில நாட்களுக்கு முன்னர் இந்திய ஊடகங்களில் வெளிவந்த மிலிந்த மொரகொடவின் பேட்டிகள் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனை என்ற ஒன்றே இல்லை எனவும் தனது கொள்கை விளக்க உரையில் கோத்தபாயன் மிக தெளிவாக கூறியுள்ளார். இதன்மூலம் ஈழத்தமிழர்களுக்கு அரசியல்ரீதியான தீர்வே இனி இல்லை என்பதை சிங்கள அரசு வெளிப்படுத்தியுள்ளது

மேற்குறித்த இந்தக் கூற்றில் இருந்து ஈழத்தமிழர்களுக்கான தீர்வை வெளிநாடுகளின் உதவியின்றி இலங்கைக்குள் முடக்கிவிட விரும்புகின்றார் அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது பலவேறு விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டு இருந்தாலும் இரு அரசுகளுக்கு இடையில் சர்வதேச சட்ட முறைமைகளுக்குள் உட்பட்டு எழுதப்பட்ட ஒப்பந்தமாகும்.

இந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிய ஈழத்தமிழர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் இருவர் துணைபோதல் என்பது இன்றைய தைவான் நிலையையே தமிழீழ அரசிற்கு ஏற்படுத்தவல்ல சதிவலையாக அமையும்.

குறிப்பாக ஈழத்தமிழர்களுக்கு விளங்குகின்ற முறையில் சொல்வதானால் கடந்த 73 வருடமாக ஈழத்தமிழர்கள் கொடுத்த விலையும் மாவீரர்கள் கொடுத்த தியாகத்தின் வெளிப்பாட்டால் கிடைத்த சர்வதேச தளமும் தமிழீழ அரசிற்கு கிடைக்கவிடாமல் செய்கின்ற நடவடிக்கையையே கோத்தபாயாவும் கோத்தபாயாவின் மறைமுக ஏவலாளியுமான கஜேந்திரகுமாரும் அவரது கட்சியும் செய்து வருகின்றது .

தைவான் இன்றுவரை ஐக்கியநாடுகள் சபையில் உறுப்புரிமை அற்ற நாடாக உள்ளது .இது தைவான் தலைவர் Chiang Kai-shek செய்த வரலாற்று தவறாகும்.இந்த வரலாற்று தவறாலேயே

இன்று தைவான் கைத்தொழிலில் வளர்ச்சியடைந்து சீனா பிரேசில் ஆகிய கைத்தொழில் நாடுகள் போல தன்னை வளர்த்து கைத்தொழில் நாடாக தன்னை பிரகடனப்படுத்தியும் கூட இறைமையுள்ள நாடாக உலக அரங்கில் உள்ளது.

G7 நாடுகளுடன் நட்பாக இருந்தும்,அமெரிக்க மேற்குலக இந்திய, அவுஸ்ரேலிய நாடுகளுடன் நெருங்கிய தொடர்பை பேணியும் கூட கடந்த 73 வருடமாக ஐக்கியநாடுகள் சபையில் உறுப்புரிமை அற்ற இறைமையற்ற நாடாகவே தைவான் உள்ளது.இந்த உலகின் அரசியல் சட்டத்திட்டங்களை ,நடைமுறைகளை ஈழத்தமிழர்கள் அவதானமாக உளவாங்கிக்கொள்ள வேண்டும்.

முதலாவது Republic of China வாக இருந்த தாய்வான் தனது உறுப்புரிமையை இன்றுவரை ஐநாவில் உறுப்புரிமை இல்லாத நிலையில் இருக்க ஐக்கியநாடுகள் சபையில் 1971 இல் கொண்டுவரப்பட்ட தாய்வான் 2758 தீர்மானம் தான் காரணமாகும்.

அன்றைய பனிப்போரின் ஆரம்ப காலத்தில் ரஷ்யாவை எதிர்க்க ஒரு பலமான ஆசிய நாட்டை தேர்வுசெய்த மேற்குலகமும், ஐரோப்பிய நாடான் பிரான்சும் Republic of China என முதன் முதலில் பிரகடனப்படுத்தப்பட்ட தைவானை ஐக்கிய நாடுகள் சபைக்கு அங்கீகாரம் வழங்காமல் People's Republic of China என்று பெரிய சீனாவை அழைத்து one china என அதற்கு தீர்மானம் கொண்டுவந்து (2758) சீனாவிற்கு வீட்டோ அதிகாரத்தை வழங்கினார்கள். சீனா ஐக்கியநாடுகள் சபையில் வீட்டோ அதிகாரத்தில் உள்ளவரை தைவான் ஒரு இறைமையுள்ள நாடாக அங்கீகாரம் பெறமுடியாத வரலாற்று தவறை Chiang Kai-shek அவர்கள் தாய்வான் மக்களுக்கு செய்துவிட்டார். இன்று இரண்டுகோடியே முற்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஐயாயிரத்து பத்து ஆக உள்ள சனத்தொகையை கொண்ட தைவான் நாடு, அண்ணளவாக 13,980 sq miles நிலப்பரப்பை கொண்டுள்ளதுடன், உலகில் உள்ள நாடுகளில் பொருளாதாரத்தில் 22 வது இடத்தை பிடித்துள்ளது இருந்தும் இறைமையற்ற நாடாக இன்னுமொரு நாட்டின் தயவில் வாழ்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்திய

Chiang Kai-shek என்கின்ற தலைவரை தாய்வானிய மக்கள் ஒருபோதுமே மன்னிக்க மாட்டார்கள்.

தாய்வானை இறைமையுள்ள ஒரு நாடாக 15 நாடுகளே அங்கீகரித்து உள்ளது அதுவும் உலக நாடுகளில் அதிகளவில் முக்கியத்துவம் பெறாத இலத்தீன் அமெரிக்க நாடுகளுளே.அதிகளவில் உள்ளன அவையாவன
(Belize, Guatemala, Haiti, Holy See, Honduras, Marshall Islands, Nauru, Nicaragua, Palau, Paraguay, St Lucia, St Kitts and Nevis, St Vincent, and the Grenadines, Swaziland, and Tuvalu.)

உலகிலுள்ள மீதமான நாடுகள் அனைத்தும் தைவானுடன் காலத்திற்கு காலம் ஒப்பந்தங்களை போடுவதன் மூலமே தமது வியாபாரங்களை மேற்கொள்கின்றது ஒரு நாட்டிற்கான சர்வதேச அங்கீகாரம் என்பது மிகவும் முக்கியமானது என்பதை ஈழத்தமிழர்கள் தாய்வானின் உதாரணத்தின் மூலமாக புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் அவர்களால் பலவேறு போராட்டங்களுக்கு மத்தியிலும் சொல்லொணா இடர்களுக்கு மத்தியிலும் சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஈழத்தமிழர்களின் பிரச்சனையை ஒன்றுமற்ற சர்வதேச அங்கீகாரத்தை ஒன்றுமில்லாத ஒன்றாக மாற்றுவதற்கான மாற்றுத்திட்டமாகவே புதிய அரசியல்யாப்பின் மூலம் வெளிவர இருக்கின்றது .இந்த திட்டத்தை விரைவுபடுத்தி இந்த மாத இறுதிக்குள் சிங்கள அரசு முடிவுகளை மேற்கொள்ளவும் விழைகின்றது.மார்ச் மாதம் வரவிருக்கின்ற மனிதஉரிமைகள் கூட் டத்தொடருக்கு முன்னராக அனைத்துவிதமான மாற்றங்களையும் நிறைவுசெய்து தனது இலக்கை அடைத்துவிட இலங்கை அரசு கடந்த மார்கழி மாதத்தில் இருந்தே திட்டங்களை போட்டு சுமந்திரன் தரப்பை அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் பிரித்தானியாவிற்கும் அனுப்பிவைத்து தமது பணிகளை வெற்றிகரமாக செய்ததின் வெளிப்பாட்டினை கடந்த வாரம் Lord (Tariq)Ahmad அவர்களின் அறிக்கையில் இருந்து அறியலாம்.

இன்றைய இந்த இக்கட்டான சூழ்நிலைக்குள் ஈழத்தமிழர்களின் அரசியல் கட்சிகளுக்குள் தூயதமிழ்தேசிய கட்சி என்றும், தாமே உறுதியான கொள்கை கொண்டவர்கள் எனவும் கூறும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தரப்பு 1987 இல் இரு அரசுகளுக்கு இடையில் எழுதப்பட்ட சர்வதேச ஒப்பந்தமொன்றை கிழித்தெறிந்து, இன்றுள்ள சூழ்நிலையில் கோத்தபாய அரசு கொண்டுவர நினைக்கின்ற அரசியல் மாற்றத்திற்கு துணைபோதல் என்பது ஈழத்தமிழர்களுக்கு இனிமேல் ஒருபோதும் அரசியல்ரீதியான தீர்வினை வழங்கமாட்டோம் என வெளிப்படையாக கோத்தபாயன் கூறிய பின்னும் கோத்தபாயன் விருப்பை நிறைவேற்ற முனைவது கஜேந்திரகுமார் கட்சியின் கபடத்தை வெளிப்படுத்துகின்றது .

இன்றைய சூழ்நிலையில் மிகவும் குறைந்த அல்லது ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வின் தொடக்கப்புள்ளியாக உள்ள எமது கையில் உள்ள

விடயத்தை பலப்படுத்த பணியாற்றுவதற்கு பதிலாக சிங்கள அரசின் விருப்பிற்கு அமைவாக கஜேந்திரகுமார் தரப்பு செயற்படுதல் என்பது அன்றைய காலத்தில் கஜேந்திரகுமாரின் பேரன் ஜி ஜி பொன்னம்பலம் அவர்களின் நடத்தையையே மீண்டும் நினைவுபடுத்துகின்றது .

இந்த சூழ்நிலையில்,ஈழத்தமிழர்களாகிய நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டும். அந்த சந்தர்ப்பங்களை எமக்கு சாதமாக பயன்படுத்திக்கொண்டு எம்மை மேல்நோக்கி அடுத்த கட்டத்திற்கு நகர்த்தி செல்ல வழிவகைகளை தேடவேண்டும் . அதனை விடுத்து எம்மிடம் உள்ள சர்வதேச ஒப்பந்தத்தை கிழித்தெறிவது என்பது மிகவும் ஆபத்தானதே. ஏனெனில் இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது இலங்கை சுந்தந்திரமடைந்த காலத்தில் இருந்து ஈழத்தமிழ்மக்கள் கொடுத்த குருதியினதும், ஆக்கிரமிப்பிக்களினது சொத்தழிப்புக்களின் பெறுமானமே இலங்கை இந்திய ஒப்பந்தமும் அந்த ஒப்பந்தத்தால் ஈழத்தமிழ்மக்களுக்கு கிடைத்த மிக, மிக குறைந்த அளவிலான தமிழ்மக்களால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாத தீர்வாகும். இருந்தும் இன்றைய சூழ்நிலையில் இன்று எம்மிடம் உள்ள மிகவும் குறைந்த பிடிமானதை கொண்டு எமக்கான இறுதி இலக்கை அடைவதற்கு வழியை தேடவேண்டும்.

இந்தியாவின் விருப்பத்திற்கு அமைவாகவே குறித்த கடிதங்கள் எழுதப்படுகின்றது என கஜேந்திரகுமார் தரப்பு தம்மை நல்லவர்களாக கட்டிடவும் தூயதேசியவாதிகளாக காட்டிடவும் வழிதேடிக்கொள்ளும் .ஆனால் உண்மையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை எழுதியபோது கூட இணைக்கப்பட்ட மாகாணங்களை பிரிக்கவிடாமல் எவ்வாறு தடுப்பது என்றதொரு தீர்க்கமான பார்வையற்ற முறையிலேதான் தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது .அவ்வாறாயின் இலங்கையின் நடைமுறையை சரியாக அறியாமலேதான் இந்தியாவும் குறித்த இந்த ஒப்பந்தத்தை எழுதியுள்ளது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் கடல்சார் தொலைநோக்கு பார்வையானது மிகவும் மந்தமாகவே காணப்படுகின்றது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும் . இந்தியாவை பொறுத்தவரை தனது பொருளாதார நலனை இலங்கையிடம் இருந்து பெற்றுக்கொள்ள ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சனை ஒரு மைல்கல்லாக இருந்தது. ஈழத்தமிழர்களின் பிரச்சனையை முன்னிறுத்தியே இலங்கைக்குள் இந்தியா புகுந்துகொண்டது .ஈழத்தமிழர்கள் என்கின்ற துருப்புச் சீட்டை பயன்படுத்தி இலங்கைக்குள் இந்தியா புகுந்து தனது பொருளாதார நலனை பேணிக்கொண்டு ஈழத்தமிழர்களுக்கும் ஒரு சிறு பருக்கையை எடுத்து போட்டது.

இன்றும் இலங்கையுடன் பொருளாதார ஒப்பந்தத்தை போட்டவுடன் இலங்கை எதிர்காலத்தில் குறித்த பொருளாதார ஒப்பந்தங்களை கிழித்து எறியாது என நம்புவது இந்தியாவின் அரசறிவியல் முதிர்ச்சியின்மையே காட்டுகின்றது.

இந்தியாவின் இத்தகைய அலட்சிய போக்கு, வெள்ளம் வருமுன்னரே அணைக்கட்ட தவறுகின்ற சசெயற்பாடும் இந்தியாவின் தோல்விகளுக்கே வழிவகுக்கும்.இன்று இலங்கையானது எந்த துருப்புசீட் டை பயன்படுத்தி இலங்கைக்குள் நுழைந்ததோ அந்த துருப்புச்சீட்டை இலங்கை இப்போது 50 வீதத்திற்கும் மேலாக அழித்துவிட்டது. மீதமிருக்கின்ற துருப்புசீட் டையும் இலங்கை சீனாவின் உதவுடனும், பாகிஸ்த்தானின் உதவியுடனும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதை இந்தியா புரியாமல் இருப்பது இந்தியாவின் தொலைநோக்கு பார்வையற்ற மறுமுனையில் கூறுவதானால் தாய்வான் தலைவரின் சிந்தனை ஒத்த சிந்தனையாகவே அரசியல் அறிஞர்கள் கூறுவர்.

இதேபோல ஈழத்தமிழர்களும் இன்றைய சூழ்நிலையை சரியாக புரிந்துகொண்டு தீர்க்கமான முடிவுகளை எடுத்து ஈழத்தமிழ்மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே குரலில் இலங்கையில் சமஷடி கோட்ப்பாட்டினை வலியுறுத்தி வருகின்ற 30/01/22 ஊர்வலத்தில் கோஷங்கள் எழுப்ப வேண்டும். அதனை விடுத்து அன்றைய தைவான் தலைவரைப்போல ஈழத்தமிழர்கள் முடிவெடுத்தால் ஈழத்தமிழர்களின் இறுதிப்பிடியையும் கஜேந்திரகுமார் தரப்பு  கைவிடச்செய்து கோத்தபாயாவின் புதிய அரசியல் அமைப்பிற்கு ஆதவளித்து கஜேந்திரகுமார் தனது புலம்பெயர் சொத்துக்களையும் தென்னிலங்கையில் உள்ள சொத்துக்களையும் பாதுகாத்துக்கொள்வார் .அதேபோல புலம்பெயர்தேசங்களில் உள்ள விடுதலைப்புலிகளின் சொத்துக்களை  தமதுரிமையாக்கிய கனவான்களும் தமது சொத்துக்களை பாதுகாத்து கொள்வார்கள்.

ஈழத்தமிழர்களால் கொடுக்கப்பட்ட இரத்தமும் சதையும் பிண்டமுமாக அழிந்துபோன உயிர்களும் சொத்துக்களும் ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாசையையும் மாவீரர்களின் கனவுகளும் கோத்தபாயவின் இனவழிப்பு வெறிக்குள் சிக்கி அழிந்துவிட போகின்றது .ஆகவே ஈழத்தமிழர்கள் இன்றுள்ள சூழ்நிலையை மிகவும் ஆழமாக அறிந்து கொள்வதுடன் வருகின்ற 30/01/2022 நிகழ்விருக்கின்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு முழுமையான சமஷடியை தருமாறு குரல்கொடுக்க வேண்டும்.

கோத்தபாயன் விரித்துவைத்துள்ள வலைக்குள் கஜேந்திரகுமாரின் கரத்தை பற்றிக்கொண்டு சென்று புதைகுழிக்குள் விழுந்துவிடக்கூடாது.

நன்றி.



இந்த மாத இறுதிக்குள்

## புதிய அரசமைப்பு வரைவு ஜனாதிபதிக்கு கையளிப்பு

நிபுணர்குழு திட்டம்


கொழும்பு, ஜன. 24

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவானது, அரசமைப்பு உருவாக்கத்துக்கான வரைபை இந்த மாத இறுதிக்குள் ஜனாதிபதியிடம் கையளிக்கத் திட்டமிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் 19ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானத்துக்கு அமைவாக நியமிக்கப்பட்ட இந்தக்குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைவராக உள்ளதோடு, ஜனாதிபதி சட்டத்தரணி காமினி மாரப்பன, ஜனாதிபதி சட்டத்தரணி மனோஹர டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, ஜனாதிபதி சட்டத்தரணி நசீமா கமுர்தீன், கலாநிதி சர்வேஸ்வரன், ஜனாதிபதி சட்டத்தரணி சமந்த ரத்வத்த, ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த செனவிரத்ன, ஜனாதிபதி சட்டத்தரணி ஜி.எல். பீரிஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சர் தினேஷ் குணவர்தன ஏப்ரலில் புதிய அரசியலமைப்புக்கான வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)




என்றும் அன்புடன்,

**காவியா (நிலா)**
**23 : 54**
**25- Jan -2022**
**பெரிய பிரித்தானியா**